 ISSN: 2454-3993

# இராமாநுசரும் வைணவமும்

***சு. லதா***
***இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை***
***கேஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி***
***கோவை***

ஐந்து புலன்களைக்கட்டி மனதை ஓர் இடத்தில் நிறுத்துவது ஞானம். ஞானம் உடையவருக்கு காலமும் இடமும் வசப்படும் தெளிவு என்பது அறிவு.

**கல்வி கொடுத்தவன் வித்தியா குரு**
**தீக்கை அளிப்பவன் தீட்சா குரு**
**ஞானம் அளிப்பவன் ஞான குரு**

தனிப்பட்ட ஒருவருக்கு ஞானம் கொடுப்பவன் தீட்சா குரு சந்ததிகளுக்கு ஞானம் கொடுப்பவர்கள் ஞான குரு புத்தர் பெருமான் ஏசுபிரான், இராமாநுசர் எல்லாரும் உலகக் குரு ஆவர் என்பர். இந்துமதம் மிகவும் பழமையானது. நம்முடைய ஞானிகள் இந்தியாவுக்கு மட்டுமல்ல உலகத்துக்கே சொந்தமானவர்கள். வைணவ சமயப் பெரியாரான இராமாநுசர் தம் மனித நேயச் சிந்தனையாலும் செயல் திறத்தாலும் பெருஞ்சிறப்புப் பெற்றவர்.

இந்தியத் தத்துவஞான வரலாற்றில் சங்கரர் (கி.பி.788-820), இராமாநுசர் (கி.பி.1017-1137), மத்வர் (கி.பி.1119-1278) என்ற மூவரும் ஞானப் பேரரசர்களாக கொள்ளப்படுகிறார்கள். சங்கரர் அத்வைதம் என்னும் கோட்பாட்டையும், இராமாநுசர் விசிட்டாத்வைதம் என்னும் கோட்பாட்டையும், மத்வர் துவைதம் என்னும் கோட்பாட்டையும் கொண்டவர்கள்.

திருமாலைப் பரம்பொருளாகக் கொண்டு சரணடைய நினைப்பவர்கள் வைணவர்கள் ஆவார். சாதி வேறுபாடுகளை அடியோடு நிராகரித்தவர் இராமாநுசர். வைணவம் இராமாநுசர் காலத்தில் மக்கள் இயக்கமாக மலரத் தொடங்கியது.

**ஆசார்ய ரத்ன ஹாரம் - பெரியபெருமாள்**

ஆசார்ய ரத்ன ஹாரம் என்பது வைணவ ஆசாரியர்களின் வரிசையைக் காட்டுவதாகும். இந்த ஆசார்ய ரத்ன ஹாரத்தில் நடுநாயகமாக பெரியபெருமாளாகிய இறைவனே முதல் ஆசார்யன் கடைசி ஆசார்யர் மணவாள மாமுனிகள் எனக்கொள்வர். வைணவ சமயம் இராமாநுசரால் ஏற்றம் பெற்றது.

இவருக்கு முன்பு உள்ள ஆசார்யர்கள் இராமாநுசருக்கு குருவாகவும், இராமாநுசருக்குப் பின்பு உள்ள ஆசார்யர்கள் இவருக்கு சீடர்கள் என்றும் பெருமையும் பெற்றாா;கள் என்று பிள்ளை லோகஞ்சீயர் எடுத்துக் கூறியதை இந்த ‘ஆசார்ய ரத்ன ஹாரம்’ நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

**இராமாநுசர் வரலாற்று நூல்கள் - பெரியபெருமாள்**

- பெரியபிராட்டியார் மணவாளமாமுனிகள்
- சேனைமுதலியார் திருவாய்மொழிப்பிள்ளை
- நம்மாழ்வார் பிள்ளைஉலகாசிரியர்
- நாதமுனிகள் வடக்குத்திருவீதிப்பிள்ளை
- உய்யக்கொண்டார் நம்பிள்ளை
- மணக்கால்நம்பி நஞ்சீயர்
- ஆளவந்தார் பட்டர்
- பெரியநம்பிகள் எம்பார்

**இராமாநுசர்**

இராமாநுசரிடம் அளவுகடந்த பக்திகொண்ட வடுகநம்பி யதிராஜவைபவம் என்னும் வடமொழி நூலே இராமாநுசருடைய வரலாற்றை சொல்லும் முதல்நூல். மேலும் ஸ்ரீயதிராஜ மங்களம் ‘அஷ்டோத்தர சதநாம ஸ்தோத்திரம்’ என்னும் இரண்டு நூல்களையும் வடுகநம்பி எழுதியுள்ளார். இந்த இரண்டு நூல்களிலும் இராமாநுசரின் வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன. இராமாநுசருடைய காலத்தில் வாழ்ந்த கருடவாகன பண்டிதர் இயற்றிய திவ்யசூரிசரிதம் என்னும் வடமொழி நூலிலும் இராமாநுசருடைய வரலாறு இடம் பெற்றுள்ளது. ப்ரபந்நாம்ருதம், ஸ்ரீராமாநுச ஜம்பு, யதிராஜ விஜயம் ஆகிய வடமொழி நூல்கள் இராமாநுசருடைய வரலாற்றைக் கூறுகின்றன. இந்த மூன்று நூல்களையும் மூவர் இயற்றியுள்ளனர்.

ப்ரபந்நாம்ருதம் சுலோக வடிவிலும், இராமானுச ஜம்பு உரையும் பாட்டும் கலந்த நடையிலும், யதிராஜ விஜயம் நாடக வடிவிலும் அமைந்துஉள்ளன. வேதாந்த தேசிகர் (கி.பி.1268-1369) இயற்றிய ‘யதிராஜ ஸப்ததி’ என்ற வடமொழிநூலும் மணவாள மாமுனிகள் (கி.பி.1370-1443) இயற்றிய ‘யதிராஜ விம்சதி’ என்ற வடமொழிநூலும் இராமாநுசருடைய வரலாற்றை எடுத்துச் சொல்கின்றன.

மணிப்பிரவாள நடையில் அமைந்த பின்பழகிய பெருமாள் ஜீயர் இயற்றிய ‘இராமாநுசர் திவ்ய சரிதை’ என்னும் நூலும் இராமாநுசரின் வரலாற்றை சொல்லிச் செல்கின்றன.

குருபரம்பரை மூவாயிரப்படி, பன்னீராயிரப்படி, பெரிய திருமுடியடைவு, அந்திமோபாய நிஷ்டை, ரகஸ்ய விவேகம், சரமோபாய நிர்ணயம், பழநடை விளக்கம், கோயில் ஒழுகு, திருமலையொழுகு என்னும் நூல்களில் இராமாநுசர் பற்றிய புதிய செய்திகள் அமைந்துள்ளன்.

ஆறு குருபரம்பரை நூல்களுள் ஒன்றான வடிவழகிய நம்பிதாசரின் குருபரம்பரை நூலின் இரண்டாவது காண்டத்தின் 1118 செய்யுட்கள் இராமாநுசரின் வரலாற்றை எடுத்துக்கூறுகின்றன. திருவரங்கத்தமுதனார் இயற்றிய இராமாநுச நூற்றந்தாதி இராமாநுசரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும், சாதனைகளையும் எடுத்துக் காட்டுகிறது. திவ்வியப் பிரபந்த வியாக்கினங்கள், வார்த்தாமாலை என்ற நூலிலும் இராமாநுசரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன. இராமாநுசரின் வரலாறு சொல்லும் நூல்கள் எல்லாம் உலக மக்களை கரையேற்ற வந்தவர் இவர் என்று எடுத்துச் சொல்கின்றன. பெரியநம்பி இராமாநுசருக்கு பஞ்ச ‘சம்ஸ்காரம்’ செய்து வைத்தவர் ஆவார். இளையாழ்வாருக்கு பஞ்சசம்ஸ்காரம் செய்து வைத்து அவருக்கு இராமாநுசர் என்று பெயர் வைத்தார்.

**இராமாநுசரின் குரு**

பெரியநம்பி, திருக்கோட்டியூர்நம்பி, திருமாலையாண்டான், திருவரங்கப் பெருமாளரையர், பெரிய திருமலை நம்பி ஆகிய ஐவரும் ஆளவந்தாரின் சீடர்கள் ஆவர். இவர்கள் ஐவரும் தங்களுடைய அறிவுச் செல்வத்தை இராமாநுசருக்குக் கொடுத்தனர். ஐந்து ஆசிரியர்களுடைய ஞானம் இராமாநுசர் ஒருவரிடம் இருந்தது. பெரியநம்பியிடம் ஆழ்வார்கள் அருளிய அருட் செயல்களையும், திருக்கோட்டியூர் நம்பியிடம் வீடுபேற்று ரகஸ்யார்த்தங்களையும் திருவரங்கப் பெருமாளரையரிடம் சரமோபாயத்தையும் பெரியதிருமலை நம்பியிடம் ஸ்ரீராமாயணத்தையும் கற்று அதிலிருந்து பல புதிய விளக்கங்களையும் இராமாநுசர் உலகத்திற்கு எடுத்துச் சொன்னார்.

**இராமாநுசர்**

கலியுகம் 4118 சாலிவாகன சகாப்தம் 940 ஆலதுபிங்கள வருடம் சித்திரை மாதம் சுக்கலபஞ்சமி வியாழக்கிழமை அன்று திருவாதிரை நட்சதிரத்தில் நடுப்பகலில் கடகலக்கனத்தில் ஹரித கோத்திரத்தில் பிறந்தவர். ஆசூரி கேசவ சோமாயாஜி தாயார் காந்திமதி என்கிறவர் பிறந்தார். அப்பாவிடமே கல்வி கற்றுக்கொண்டார். இராமாநுசர் இந்த உலகத்தில் ஆதிசேடனின் அவதாரமாக வந்து பிறந்தவர். பெருமாளுடைய ஐந்து ஆயுதங்களின் சக்திகொண்டவர். இவர் இந்த ஜகத்துக்கு ஆச்சாரியார் வேதத்தின் உண்மைப்பொருளைச் சொன்னவர் வைணவத்தின் வளர்ப்புத்தாய். கி.பி.1017இல் பிறந்த இராமாநுசர் கி.பி. 1049இல். முப்பத்திரண்டு வயதில் துறவி ஆனார். ஆளவந்தாருக்கு கொடுத்த வாக்குப்படி பிரம்மசூத்திரத்துக்கு உரை எழுத வேண்டும் என்றால் பல தத்துவ நூல்களை படித்து உணர வேண்டும். தத்துவ நூல்களின் சாரத்தை உணர்ந்து கொள்ள

ஒரு சீடர் கூட்டம் வேண்டும் என்று இராமாநுசர் நினைத்தார். கூரேசர் என்பவரும் நாச்சியாரம்மாள் என்ற இராமாநுசரின் சகோதரியின் மகனான தாசரி என்ற முதலியாண்டானும் இராமாநுசரின் தண்டும், பவித்திரம் என்று சொல்லும் நிலையில் இருந்தனர்.

**இராமாநுசர் - உடையவர்**

காஞ்சிபுரத்தில் இருந்த இராமாநுசரை ஸ்ரீரங்கத்துக்கு அழைத்து வருவதற்காக திருவரங்க பெருமாளரையர் என்பவரை பெரியோர்கள் அனுப்பி வைத்தனர். காஞ்சிப் பேரருளாள பெருமான் அரையருடைய இசைப்பாடலுக்கு மயங்கி அரையர் வேண்டும் வரங்களை கொடுப்பதாக சொன்னார். அரையர் இராமாநுசரைக் கேட்டார். காஞ்சிப் பேரருளாளன் பெருமான் இராமாநுசரை அரையருடன் திருவரங்கத்துக்கு அனுப்பி வைத்தார். திருவரங்கம் சென்று இராமாநுசர் பெரிய பெருமாளை வணங்கி நின்றவுடன் பெருமாள் தன் தாமரைக் கண்களால் இராமாநுசரைப் பார்த்து "இராமாநுசரே! பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் என்கிற நம்முடைய விபூதி ஐஸ்வர்யத்தையும் உமக்கும் உம்முடையார்க்கும் தந்தோம் ஆகையால் இன்றுமுதல் நீர் இவற்றுக்கு உடையவர் என்னும் பட்டத்தைப் பெற்று, நம் காரியத்தை எல்லாம் ஆராய்ந்து நடத்துவீர்" என்றார். இராமாநுசரின் ஆசாரியாரான பெரியநம்பி இவரை "உடையவரே" என்று ஒருமுறை அழைத்தார். முதலிகள் எல்லோரும் இராமாநுசரை உடையவர் என்று அழைத்தனர்.

திருவரங்கத்தில் தங்கி கோயில் நிர்வாகச் சீர்திருத்தங்களைச் செய்தார். முதலியாண்டானுக்கு கோயில் உள்துறை நிர்வாகங்களைக் கவனிக்கும்படி இராமாநுசர் கட்டளையிட்டார். "கோயில் அனைத்துக் கொத்து" என்ற கோயில் பணியாளர் பிரிவுகளின் நிலைகளை அறிந்து பல மாற்றங்களைக் கொண்டு வந்தார். திருவரங்கக் கோயிலின் உத்சவங்களை முறைப்படுத்தினார். இராமாநுசர் ஏற்படுத்திய முறைகளின் படிதான் இன்றும் திருவரங்க கோயிலின் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருக்கோட்டியூர் நம்பிகளிடம் தெரிந்து கொண்ட ரகஸ்யர்த்தமான "ஓம் நமோ நாராயணாய" என்ற திருமந்திரத்தை மக்களுக்கு எடுத்துச் சொன்னதால் இராமாநுசர் 'எம்பெருமான்' என்று அழைக்கப்பட்டார். இராமாநுசர் திருக்கோட்டி நம்பிகளிடம் சரமசுலோக பொருளின் விளக்கத்தையும் கேட்டார். திருமாலையாண்டானிடம் திருவாய்மொழி விளக்கங்களைக் கற்றுக் கொண்டார். இராமாநுசருடைய புகழ் எங்கும் பரவியது. சாதி வேற்றுமை பாராமல் வாழும் இராமானுசரை வைதிகர்கள் எதிர்த்தனர். வைதிகர் சிலர் உஞ்ச விருத்திக்காக (பிச்சைக்காக) சென்ற இராமாநுசருக்கு அர்ச்சகர் மனைவி மூலமாக நஞ்சு கலந்த உணவைக் கொடுத்தனர்.

பின்பு பிரம்ம சூத்திரத்துக்கு விரிவுரை எழுதுவதற்காக "போதாயன விருத்தி" என்னும் நூலை கூரேசருடன் காஷ்மீருக்குச் சென்று அதனைப் பெற்றார். அந்நூலை சிலர் வழியில் கவர்ந்து சென்றனர். அந்த நூலில் சொல்லப்பட்ட கருத்துக்களை நினைவுப்படுத்தி முன்னோர்கள் சொன்ன விசிட்டாத்வைதத்தை இராமாநுசர் நிலைநாட்டினார். அவர்களை எல்லாம் வைணவர்களாக மாற்றினார். சரஸ்வதி தேவியே இராமாநுசருக்கு "ஸ்ரீபாஷ்யகாரர்" என்று பட்டம் கொடுத்தாள் என்று குருபரம்பரை எடுத்துச் சொல்கிறது. இராமாநுசர் வைணவக் கொள்கையைப் பரப்புவதற்காக எழுபத்துநான்கு சிம்மாசனாதி பதிகளை நியமித்தார்.

ஆன்மா-பரமான்மாவோடு தொடர்புகொள்ள ஞானம் வேண்டும். அந்த ஞானத்தைக் கொடுக்கும் ஆச்சாரியன் இராமாநுசர் ஆவார். ஸ்ரீவைணவசம்பிராதாயம் உலகில் என்றும் வளர வேண்டும் பரவ வேண்டும் என்றுபாடுபட்டவர் இராமாநுசர் ஆவார். நாம் பெருமாளிடம் சென்று அடையும் வழியைச் சொல்பவர் இராமாநுசர், நம்மை வழிநடத்தும் கருணை உள்ளம் உடையவர். நமக்கு முத்தி கொடுக்கும் உரிமையை இராமாநுசருக்கு பெருமாள் கொடுத்து இருக்கிறார். "அடியேன் இரானுச தாசன்" என்பதுதான் மோட்சத்திற்கு உண்மையான வழி. இதைப் புரிந்துகொண்டு இராமாநுசரை வணங்க வேண்டும். ஆச்சாரியனிடம் நன்றியுடன் நடந்து கொள்ளவேண்டும் என்று பெருமாள் எதிர்பார்ப்பார். ஆன்மாக்களுக்கு வைகுந்தத்தைக் கொடுக்கும் உரிமையை அவர் இராமாநுசருக்கு

கொடுத்து உள்ளார். ஆச்சாரியனிடம் தப்பு பண்ணினால்தான் பெருமாள் அடிப்பார் என்பது வைணவ உண்மை.

**வைணவ ஆகமங்கள் - வைகாநசம்**

வைணவ சமயம் இரண்டு வகையான ஆகமங்களை வாழும் வழிமுறைகளாக வைகாநசம், பாஞ்சராத்திரம் என்று கொண்டுள்ளது. வைகாநசம் என்ற ஆகமத்தை செய்தவர் விகனசமகரி ஆவார். இவர் மகாவிஷ்ணுவின் மகன் ஆவார். மகாவிஷ்ணு தனது மகனுக்கு கோவில் அமைக்கும் முறைகள், கடவுளின் உருவச்சிலைகளை எவ்வாறு அமைக்க வேண்டும். எந்த முறையில் பிராயச் சித்தங்கள் செய்யலாம் போன்றவற்றை விளக்கிக் கூறினார். இந்த முறையே வைகாநசம் என்று அழைக்கப்படுகிறது.

விகனஸர், மரீசி, அத்ரி, பிருகு, காச்யபர் ஆகிய தனது சீடர்களுக்கு உபதேசம் செய்தார். இவர்கள் நான்கு லட்சம் கிரந்தங்கள் செய்தனர். விகனஸ மகரிஷியின் வேதக்கருத்துகள் 'யசுஸ்' என்று அழைக்கப்படுகிறது.

வைகாநசம், கிருஹ்யம், தைவீகம் என்ற இரண்டுபிரிவுகளாகக் காணக்கிடக்கின்றது. வைகாநசத்தில் மகாவிஷ்ணு ஆதிபுருஷன் நாராயணனும், திருமகளும் ஒரே பரம்பொருளின் இரண்டு பக்கங்கள் என்று வைகாநசம் எடுத்துச்சொல்கிறது. விஷ்ணுவின் ஐந்து நிலைகள் என்று சொல்லப்படுகின்ற பரத்வம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை ஆகியவற்றில் கூட திருமகள் நாராயணனை விட்டுப்பிரியாமல் இருக்கிறாள். ஆழ்வார்கள், ஆச்சாரியர்கள், மடாதிபதிகள் ஆகியோரின் சிலைகளுக்கு வடகலையான வைகாநசம் இடம் தருவதில்லை. ஆழ்வார்களின் திவ்விய பிரபந்தங்களை ஆலய வழிபாட்டில் வைகாநசர்கள் பாடுவது இல்லை. சித்து, அசித்து, ஈஸ்வரன் ஆகிய மூன்றையும் வைகாநசம் உண்மைப் பொருள்களாக ஏற்றுக்கொள்கிறது.

ஆகமங்களைப்பற்றி எழுதிய ஆளவந்தார், இராமநுசர் ஆகியோர் வைகாநச ஆகமத்தைப்பற்றி குறிப்பிடவில்லை. தமிழகத்தில் இராஜராஜசோழன் காலத்தில் வைகாநசப்பிரிவினர் செல்வாக்குடன் திகழ்ந்தனர்.

**பாஞ்சராத்திரம்**

பாஞ்சராத்திரம் என்ற சொல் இரவும் பகலும் கொண்ட ஐந்து நாள்களில் ஐந்து பேர்களுக்கு உபதேசித்த ஆகமம்தான் பாஞ்சராத்திரம் எனப்பெற்றது. அநந்தன், கருடன், விஷ்வக் சேனர், கபாலி, பிரம்மா, பகவானிடம் நேரடியாக ஆகமம் உபதேசம் பெற்றவர்கள். இந்த ஆகமத்தில் ஆலயப் பிரதிஷ்டவிதிகள் கொடியேற்று நெறிமுறைகள் தீட்சைபெறுதலுக்கான வழிமுறைகள். நித்திய ஆராதனம், பூஜை, மகாஉற்சவம், கோயில் புணருத்தாருணம், பிராயசித்தம், மந்திரவிதிகள் ஆகியவை விளக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன. பாஞ்சராத்திரக் கொள்கைகளை பின்பற்றுபவர்கள் பாஞ்சராத்திர்கள் ஆவார். நாலாயிரதிவ்யபிரபந்தம் கோயில் கருவறையில் வேதங்களுக்கு சமமாக முழங்கப்பட்டன. பாஞ்சராத்திரர்கள் தென்கலையை சேர்ந்தவர்கள் ஆவர். இந்த ஆகமத்தை பின்பற்றுபவர்கள் பாஞ்சராத்திரர்கள் எனப்படுவர். ஆண்டாள் மற்றும் ஆழ்வார்களுக்கு கோவிலுக்குள் சிலைகள் வைப்பதற்கு பாஞ்சராத்திர ஆகமம் அனுமதிக்கிறது. விஷ்ணு கோவிலில் வேத முழக்கங்களாகப் தமிழ்ப் பாசுரங்கள் ஓதப்பட்டன. காலநிலை மாற்றம், சமூகத்துக்குத் தேவையான மாற்றம், மக்களின் மனநிலை ஆகியவற்றின் அடிப்படையில் பெரிய ஆச்சாரியர்கள் ஓர் ஆகம முறைப்படி நடந்த கோவிலை மற்றொரு ஆகமத்துக்கு மாற்றினார்கள். மற்றபடி ஆகம மாற்றங்கள் வைணவத்தில் எதுவும் நடைபெறவில்லை. மிகப்பழமையான கோவில்கள் பழைய காலத்தில் எந்த வழிமுறைகளைப் பின்பற்றியதோ அதே வழிமுறைகளை தான் பின்பற்றுகிறது. தென்கலை திருப்பதியில் வைகாநசம் பின்பற்றப்படுகிறது. ஸ்ரீரங்கத்தில் பாஞ்சராத்திர ஆகமம் பின்பற்றப்படுகிறது. இதில் 108 சம்கிதைகள் உள்ளன. மோட்சத்தை அடைய விரும்புகின்ற ஒவ்வொரு உயிரும் அறிந்து கொள்ள வேண்டிய மந்திரங்கள் மூன்று ரகசியங்கள்
அவை,

- திருமந்திரம்
- துவயம்
- சரமஸ்லோகம்

**ஓம் நமோ நாராயணாய என்பது ‘திருமந்திரம்’ ஆகும்**
**ஸ்ரீமன் நாராயண சரணௌ சரணம் பிரபத்யே**
**ஸ்ரீமதே நாராயணாய நமஹ என்பது துவயம்.**
**சர்வ தர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் விரஜ**
**அகம் துவா சர்வ பாபேப்யோ மோட்க்ஷ யிஷ்யாமி மாகசக என்பது சரமஸ்லோகம்.**

இந்த மூன்று மந்திரங்களும் எல்லா வேதங்களின் சாரமாகும். “ஓம் நமோநாராயணாய” என்ற திருமந்திரம் பெருமாளே நமக்கு உபதேசித்தது. சத்தியயுகத்தில் ஓர் இலந்தை மரத்தடியில் பத்ரி நாராயணன் தவக்கோலத்தில் அமர்ந்து “நரன்” என்பவனுக்கு திருமந்திரத்தை இறைவன் உபதேசித்தான்.

மக்கள் குடும்ப கடமைகளில் உலக இன்பங்களில் துன்பப்படும் போது நானே சீடனும் குருவும் ஆக வந்து பிறந்து திருமந்திரத்தை உபதேசித்து அவர்களை கரை ஏற்றுவேன் என்று பெருமாள் சொல்வதாக எடுத்துச் சொல்கிறார் பிள்ளைலோகாச்சாரியர்.

இந்த மூன்று மந்திரங்களின் சாரம் எது என்றால் அடியவர்களுக்கு தொண்டு செய்யவேண்டும் என்பது என்பர் பெரியோர். இறைவன் பாலுக்குள் நெய் போல, எள்ளுக்குள் எண்ணெய் போல இருக்கிறார். உலகம் எங்கும் பூரணமாய் கலந்து இருக்கிறான்.

ஸ்ரீமன் நாராயணனைக் காட்டிலும் உயர்ந்த தெய்வம் எதுவும் இல்லை. திருமந்திரத்தை தகுதியான குருவின் மூலம் உபதேசம் பெறவேண்டும் நமக்குக் குரு இராமாநுசர்தான். நாம் ஒருமுகப்பட்ட மனத்தோடு நாராயண மந்திரத்தைச் சொல்லவேண்டும். அஜாமிளன் என்னும் கொடியவன். அவன் செய்யாத பாவங்கள் இல்லை. அவன் இறக்கும் போது தன் பிள்ளையை “நாராயணா” என்று அழைத்தான். அவனை நரகத்துக்குக் கொண்டு போக எமதூதர்கள் காத்து இருந்தனர் நாராயணா என்று அவன் சொன்னவுடன் திருமால் தூதர்கள் அவன் ஆன்மாவை வைகுந்தம் அழைத்து சென்றனர். சிசுபாலன் எத்தனையோ தடவை கிருஷ்ணனை மாடு மேய்ப்பவன் என்று ஏளனமாக பேசி இருக்கிறான். இறுதியில் அவனுக்கும் பகவான் நற்கதி கொடுத்தான். “ஓம் நமோ நாராயணாய” என்று எத்தனை தடவை சொல்கிறோமோ அத்தனை பலன் பெறலாம்.

**துவயமந்திரம் “ஸ்ரீமன் நாராயண சரணௌ சரணம் பிரபத்யே ஸ்ரீமதேநாராயணாய நமஹ”**

1. பெரிய பிராட்டியாரை முன்னிட்டு நாராயணின் இரண்டு திருவடிகளையும் உபாயமாக(வழி) பற்றிக் கொள்கிறேன் இது முதல் வரியின் பொருள்.
2. மகாலட்சுமியுடன் இணைந்து இருக்கும் பெருமாளுக்கு எப்போதும் தவறாமல் கைங்கர்யம் செய்வேன் என்பது இரண்டாம் வரியின் பொருள்.

உன்னை விட்டுப்பிரியமாட்டேன் என்கிறார் நம்மாழ்வார். இரண்டாவது வரி அடியார்களுக்கு தொண்டு செய்பவர்கள் நான் தொண்டு செய்கிறேன் என்ற அகங்காரத்தோடு செய்யக்கூடாது என்று பெருமாள் எதிர்பார்க்கிறார். நாம் செய்யும் எல்லா தவறுகளையும் பெருமாள் பொறுத்துக் கொள்வார். அடியார்க்கு செய்யும் அவமானங்களை பொறுத்துக் கொள்ளமாட்டார். வைணவ சம்பிராயத்தில் “புருஷகாரம்” சிறந்தது. புருஷகாரம் என்றால் பெருமாளின் அருளைப் பிராட்டியின் மூலம் பெறுவது. நமக்கு வேண்டியதை பிராட்டியிடம் சொன்னால் அவர் பெருமாளிடம் தகுந்த சமயத்தில் சொல்வாள். அதனால் நாம் கோயிலுக்குச் செல்லும் போது முதலில் தாயார் சன்னதிக்குச் சென்று விட்டு பெருமாள் சன்னதிக்குச் செல்லும் வழக்கத்தை வைத்து இருக்கிறோம். இதுவே புருஷகாரம் ஆகும். “புருஷகாரம் என்றால் நாம் வேண்டுதலை சேர்ப்பிக்கும் தன்மை” என்று பொருள். பிராட்டி உலக உயிர்களுக்குத் தாயாக இருக்கிறாள்.

(எ.கா) ராமன், சீதை இருக்கும் போது குகனைச் சந்திக்கிறான். இராமனுக்குச் சகோதரன் ஆகிறான். இவர்கள் பிரிந்து இருக்கும்பொழுது வாலி சந்திக்கிறான். இறப்பை அடைந்தான் துவயம் பிராட்டியை சிறிதும் பிரியாத பெருமாளுக்கு கைங்கரியம் செய் என்கிறது. ‘‘சர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் விரஜ அகம் துவாசர்வ பாபேப்யோ மோட்ஷ யிஷ்யாமி மாகசக என்பது சரமசுலோகம் திருமந்திரம் துவயம் என்ற இரண்டும் சரணாகதிக்கு வழியைச் சொல்கிறது. சரமசுலோகம் ‘‘அதைசெய்’’ என்று நமக்குக் கட்டளை இடுகிறது. ‘‘பிரபத்யே’’ என்றால் பெருமாளே உன் பாதங்களை பற்றுகிறேன் என்று பொருள். மனிதனே எல்லாவற்றையும் விட்டுவிட்டு என்னை வழியாக பற்று உன்னைக் காக்கும் அத்தனை பொறுப்புக்களையும் நான் ஏற்றுக் கொள்கிறேன் என்கிறார் பகவான்.

இந்த மூன்று தத்துவங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லி அதன்படி வாழ்ந்து காட்டியவர் இராமானுசர். இந்த வைணவ ரகசியத்தின் பொருளை பல சமயங்களையும், மதங்களையும் சேர்ந்தவர்களுடன் வாதம் செய்து வைணவத்தை நிலைநிறுத்தியவர் இராமானுசர் ஆவார். நாம் எவ்வாறு பரமாவாகிய பெருமாளோடு சம்பந்தம் ஏற்படுத்திக்கொள்வது என்பதை பல நூல்கள் சொல்கின்றன. அந்த வழிகளையும், முறைகளையும் நமக்குச் சொல்லிக் கொடுத்தவர் இராமானுசர் ஆவார். நாம் முதலில் ஆச்சாரியன் முறையாகச் சொல்லிக்கொடுக்க “பஞ்சசமஸ்காரம்“ செய்து கொள்ள வேண்டும்.

இதற்கு குலம், சாதி, பணம், கல்வி வேறுபாடு கிடையாது. ஸ்ரீ வைணவம் இராமானுசரை திவாகரன் (சூரியன்) என்று குறிப்பிடுகிறது. திவாகரன் என்றால் சூரியன் என்று பொருள். சூரியன் இல்லாமல் இந்த உலகம் இல்லை எல்லா உலகங்கள் இருக்கும் வரை திவாகரன் ஆன இராமானுசர் புகழ் ஓயாது மறையாது. ஸ்ரீவைணவத்துக்கும் என்றும் அழிவு இல்லை. வாழ்க ஸ்ரீவைணவம்! வளர்க இராமானுஜரின் புகழ்!

**விசிட்டாத்தைவதம்**

இராமானுசரின் இந்துமதம் வேதங்களை ஆதாரமாகக் கொண்டது. புத்தசமணம் வேதத்தை அடிப்படையாகக் கொண்டது இல்லை.

**தத்துவம்**

பிரமாவுக்குள் ஜீவாத்மா, ஜீவாத்மா பரமாத்வாக ஆக முடியும். உலக உயிர்களை தனது சரீரமாகப் பெற்றவன். இறைவனே ஆத்மா. இதுவே விசிட்டாதுவைதம். அத்தனைப் பொருள்கள் உயிர்கள் அலகுக்கு விசிட்டத்தைக் காட்டி அத்வைதத்தைக் கூறுவது.

**இராமானுசரின் விசிட்டாத்வைதம்**

சேதனம் என்றால் ‘சித்து’ என்று பொருள்படும். சித்து என்ற சொல் அறிவுடைய பொருள் என்று பொருள்படுகிறது. ‘அசேதனம்’ என்றால் ‘அசித்து’ என்று பொருள்படும். அசித்து என்ற சொல் ‘அறிவற்றப் பொருள்’ என்று பொருள்படும்.

சேதனம் (சித்து) அசேதனம் (அசித்து)ப் பொருள்களோடு சேர்ந்த ஒன்று பிரம்மம்(இறைவன்) என்று சொல்லும் வைணவக்கொள்கையே விசிட்டாதுவைதம் எனப்படும். இது இராமானுசரின் கொள்கை ஆகும். இறைவன் சித்து, அசித்து ஆகிய இரண்டையும் உடம்பாகக் கொண்டு இருக்கிறான் என்பதே வைணவத்தின் அடிப்படைக் கொள்கை. இறைவன் உலகப் பொருள்களில் அந்தர்யாமியாய் (மறைந்து உள்ளே) வாழ்பவனாய் இருக்கிறான்.

**சடாரி: (கோவிலில் பக்தர்கள் தலையில் வைக்கும் கிரீடம்)**

வைணவ சமயத்தில் பெருமாள் கோயில்களில் தரிசனம் முடிந்த பின்பு பக்தர்களுக்கு தீர்த்தப் பிரசாதம் கொடுத்தவுடன் சடாரியான கிரீடத்தை, பக்தர்களுடைய தலையில் வைத்து - வைத்து எடுப்பர். வைணவத்தில் சடாரிதான் பெருமாளின் பாதங்கள் என்று கொள்ளப்படுகிறது. அந்த வகையில்,

1. பெருமாள் சன்னதியில் நம்மாழ்வார்தான் சடாரி.
2. நம்மாழ்வார் சன்னதியில் மதுரகவியாழ்வார் தான் சன்னதி சடாரி.
3. இராமாநுசனுடைய சன்னதியில் முதலியாண்டான்தான் சடாரி.
4. திருவேங்கடத்தில் அனந்தாழ்வார்தான் சடாரி. இதற்கு காரணம் தொண்டுதான். நாமும் வைணவ தொண்டால் உயர்வோம்.

**முடிவுரை**

எத்தனை மதங்கள் எத்தனை சமயங்கள் வந்தாலும் அழிக்க முடியாத ஒரு பெரிய இயக்கமாக வைணவத்தை உலகில் நிலை நிறுத்திய பெருமை இராமாநுசரை சேரும்.

**பார்வை நூல்கள்**

1. சீதாராமன். மா, ஸ்ரீஇராமானுஜர் வாழ்வும் வாக்கும்.
2. ஆபஸ்தம்பன் - மகான் ஸ்ரீஇராமானுஜர் வாழ்வும் வாக்கும்.
3. சீனிவாசன் ம.பெ., ஸ்ரீஇராமாநுசர்.
4. சி. கவிதா, ஆய்வுக் கட்டுரை "சமயம் வளர்த்த பெண்கள்".
5. ரா. ஆனிதா, ஆய்வுக் கட்டுரை "ஆண்டாள் பாசுரங்களில் பெண்மொழி".